என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆகவே, படிப்படியாக இந்த ஐந்து ஆண்டுக் காலத்திற்குள், அனைத்துச் சாலைகளையும் உடனடியாகச் செப்பனிட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலையையும், படிப்படியாக நிதி ஆதாரத்திற்கு ஏற்ப எடுத்துக் கொண்டு செயல்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 170. செல்வி பி. நிர்மலா, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

170—

மாங்கரைப்பாலம் விரிவுபடுத்துதல்

*2049 செல்வி பி. நிர்மலா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

திண்டுக்கல் பழனி சாலையில், மாங்கரைப்பாலம் குறுகியதாக உள்ளதால் சாலை விபத்து ஏற்படுவதைத் தடுக்க விரைவாகப் பாலத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

செல்வி பி. நிர்மலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த முதலமைச்சராலும் சரி செய்யப்படாததை மக்களின் நல்வாழ்வுக்காக, சர்வசாதாரணமாக சாதித்துக் கொண்டு வரும், எங்கள் அன்புத் தாய், புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில், பழனிக்கு, பாத யாத்திரையாகச் செல்லும் பல பக்தர்கள், அந்த ஆக்சிடெண்டில் சாவதாலும், பேருந்துகளில் சில ஆக்சிடெண்டுகள் ஏற்பட்டு, மக்கள் உயிருக்கு சேதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், அன்புத் தாயின் நல்லாட்சியில் கருணையோடு, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அனுமதி பெற்று, அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்ற பதிலைத்தருவாரா, விரைவில் நடைபெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவில் குறிப்பிட்டுள்ள பாலமானது, கோயம்புத்தூர்-திண்டுக்கல் எம்.இ.எச். சாலை, கிலோ மீட்டர் 181/8-ல் அமைந்துள்ளது. இப்பாலத்தைத் திரும்பக் கட்டும் பணி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணித் தொகுப்புப் பட்டியலில் மாநில நெடுஞ்சாலை என்ற தலைப்பின் கீழே, ஏறத்தாழ 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல, எல்லா இடங்களிலுமுள்ள பாலங்களைச் சரி செய்வதற்கும், சாலைகளை மேம்படுத்துவதற்கும், ஒரு முனைப்பான திட்டத்தை, நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே இந்த 9 மாத காலத்திலே நாங்கள் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். அனைத்தையும் ஒரே நேரத்திலே நிறைவேற்றுவதற்கு பல நூறு கோடி ரூபாய் வேண்டியிருக்கின்ற காரணத்தால், மிக மோசமான பகுதிகளை சீர்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுத்து, படிப்படியாக திட்டங்களை எடுத்துக் கொண்டு வருகிறோம். இந்தத் திட்டமும், நம்முடைய மதிப்பீட்டுப் பட்டியலிலே சேர்க்கப்பட்டு இருக்கிறது. நிதி ஒதுக்கீடு செய்வதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, நிச்சயமாக வரும் ஆண்டில், இந்தப் பாலத்தை கட்டுவதற்கான முயற்சியை இந்த அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 171. திரு. ச. புரட்சிமணி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

17—

மங்களூர் தொகுதியில் கூட்டுக்குடிநீர்த் திட்டம்

*1261 திரு. ச. புரட்சிமணி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் எஸ். நரையூர் வடபாதி போன்ற கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம் மங்களூர் பெருகுதியில், எஸ். நரையூர் கிராமம், மங்களூர் மற்றும் 24 கிராமங்கள்